# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 282 /2018**

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் தேதி வெள்ளிக் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தவமணி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கோவிந்தம்மாள் | தொழில் | :விவசாயம் |
| கணவர் பெயர் | : நாராயணசாமி | சமயம் | : |
| கிராமம் | : மானந்தல் | சாதி | : |
| வட்டம் | : மேல்மலையனூர் | வயது | : 44 |

தேதி 21.04.2023

சாட்சியையும் எதிரியும் அவலூர்பேட்டை காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. ஆரோக்கியதாஸ் Gr.1 - 2692 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர் .)**

**முதல் விசாரணை**

**1.** நான் மானந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். பட்டியல் சாட்சி 2 நாராயணசாமி என் கணவர். ஆஜர் எதிரி கருணாநிதி என் பக்கத்து நிலத்துக்காரர். என் ஊர்க்காரர்.

2. கடந்த 7 வருடத்திற்கு முன்பு ஜனவரி மாதம் 1ம் தேதி காலை 6.00 மணி அளவில் எனது நிலத்தில் நான் இருந்தேன். அப்போது எனது நிலத்து வழியாக அவரது மாட்டை கருணாநிதி பிடித்து கொண்டு சென்ற போது ஏன் நிலத்து வழியாக பிடித்து செல்கிறாய் என்று நான் கேட்டேன். அதற்கு என் கையை பிடித்து முருக்கி அவர் போட்டியிருந்த செருப்பை கயற்றி காதின் மீது அடித்து விட்டார். எனது வலது கையை முறுக்கியதில் வலது கை மூலமாக வேலை எதுவும் செய்ய முடியவில்லை.காதும் சரியாக கேட்கவில்லை. அப்போது நாராக்கூதி, வெள்ளாரலூழி என்று அசிங்கமாக திட்டினார். எனக்கு வீட்டுக்காரர் நான்தாண்டி என்று என்னிடம் சொன்னார். நான்தான் உனக்கு பொண்டாட்டி வாடி போலாம் என்று கருணாநிதி சொன்னார்.

3. என் கணவர் வந்த பிறகு விவரத்தை சொன்னேன். என் கணவர் என்னை அழைத்து கொண்டு அவலூர்பேட்டை காவல்நிலையத்திற்கு சென்றோம். பிறகு செஞ்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தபோது முண்டியம்பாக்கம் அரசு மரருத்துவமனைக்கு செல்லுமாறு அனுப்பி வைத்துவிட்டார்கள். விழுப்புரம் முண்டியம்பாகக்கம் அரசு மருத்துவமனைக்கு சென்று 4 நாட்கள் உள்நோயாளியாக

சிகிச்சை பெற்றேன். அதன் பிறகு மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(1. 09.01.2017 தேதியிட்ட புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1. ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**குறுக்குவிசாரணை:**

**4.** முதல் விசாரணையில் நான் கூறிய படிதான் அ.சா.ஆ. 1 புகாரில் உள்ளதா என்றால் ஆமாம். நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் எனக்கு கணவர் கிடையாது நான்தான் உன் கணவர் என்று கருணாநிதி கூறியதாக இல்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ. 1 புகார் வாக்குமூலத்தில் உள்ள விவரம் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆவணம் அல்ல என்றாலும் நான் கொடுத்த புகார் வாக்குமூலமும் வேறு என்றாலும் சரியல்ல.

5. என் மாமனார் பெயர் என்ன என்றால் முனுசாமி. என் மாமனாருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3 பிள்ளைகள். எனது பெரிய மூத்தாரின் நிலத்தை எதிரி கருணாநிதி கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். என் மூத்தார் பெயர் எனக்கு தெரியவில்லை. எதிரி வாங்கிய நிலத்தை நாங்கள் உரிய தொகைக்கு வாங்காததால் எதிரி கிரையம் வாங்கினார் என்றால் அந்த சொத்தை கிரையம் கொடுக்கும்படி நான் கேட்கவே இல்லை. அவர்கள் மூத்தார் கிரையம் கொடுக்க எங்களிடம் கேட்டபோது வேண்டாம் என்று சொல்லிவிட்டோம்.

6. எங்கள் நிலத்திற்கும், எதிரி கிரையம் வாங்கிய நிலத்திற்கும் இடையில் வரப்பு மட்டும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வரப்பை நாங்கள் குறைத்துவிட்டோம் என்றால் சரியல்ல. மேற்படி வரப்பு வழியாகதான் கருணாநிதியும், நாங்களும் செல்லவேண்டும் என்றால் சரிதான்.

7. மேற்படி வரப்பின் வழியாக ஆடு, மாடுகளை எதிரி பிடித்து கொண்டு செல்லும்போது வரப்பில் இருப்பக்கத்திலும் உள்ள நிலத்தில் இறங்கி செல்லும்போதுதான் எதிரியிடம் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். கரம்பில்தான் ஆடு, மாடுகளை ஓட்டிச்சென்றார் என்றால் பயிர் மீதுதான் ஓட்டிச்செல்கிறார். முதல் விசாரணையில் எந்த பயிரின் மீது ஆடு, மாடு ஓட்டிச்சென்றார் என்றோ, என்ன பயிர் சேதம் ஏற்பட்டது என்றோ நான்

சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் கூறிய சம்பவம் எந்த தேதியில் நடந்தது என்றால் ஜனவரி மாதம் 1ம் தேதி . அ.சா.ஆ.1புகார் வாக்குமூலத்தில் ஜனவரி மாதம் 1ம் தேதி கொடுத்ததாக இல்லை என்றால் சம்பவம் நடந்த மறுநாள் போலிசாரிடம் சொன்னோம்.

புகார் எழுதியது யார் தெரியுமா என்றால் தெரியாது. புகாரில் என்ன எழுதிக்கொண்டார்கள் என்று தெரியுமா என்றால் தெரியவில்லை. எதிரி செருப்பால் காதில்தான் அடித்தாரா என்றால் ஆமாம். அ.சா.ஆ. . 1 புகார் வாக்குமூலத்திலும், போலிசார் வாக்குமூலத்திலும் எதிரி என்னை காதின் மீது செருப்பால் அடித்ததாக நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எந்த வகையான செருப்பு என்று புகார் வாக்குமூலத்திலும், போலிசார் வாக்குமூலதிலும், நீதிமன்றத்திலும் சொல்லவில்லை என்றால் ரப்பர் செருப்பால்தான் அடித்தார்.

புகார் வாக்குமூலத்திலும், போலிசார் வாக்குமூலதிலும், நீதிமன்றத்திலும் எந்த இடத்தில் முதுகில் குத்தினார் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. சண்டை நடந்த இடம் யாருக்கு சொந்தமான இடம் என்றால் எனக்கு சொந்தமான இடத்தில்தான் நடந்தது. சம்பவம் நடந்த போது வேறு யார் இருந்தார்கள் என்றால் யாரும் இல்லை. எனது மூத்தாரிடம் இருந்து நிலத்தை எதிரி வாங்கியதால் எதிரிக்கு எதிராக பொய்யான புகார் வாக்குமூலத்தை நான் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. செருப்பை போலிசாரிடம் நான் கொடுத்தேனா என்றால்ெ செருப்பை கருணாநிதியே போட்டுக்கொண்டு சென்றுவிட்டார். இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. பழிவாங்கும் நோக்கில் கொடுக்கப்பட்ட பொய்யான புகார் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளள்ப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். 282 /2018**

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் தேதி வெள்ளிக் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தவமணி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நாராயணசாமி | தொழில் | :விவசாயம் |
| தந்தை பெயர் | : முனுசாமி | சமயம் | : |
| கிராமம் | : மானந்தல் | சாதி | : |
| வட்டம் | : மேல்மலையனூர் | வயது | : 68 |

தேதி 21.04.2023

சாட்சியையும் எதிரியும் அவலூர்பேட்டை காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. ஆரோக்கியதாஸ் Gr.1 - 2692 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர் .)**

**முதல் விசாரணை**

**1.** நான் மானந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். அசா.1 கோவிந்தம்மாள் என் மனைவி. ஆஜர் எதிரி கருணாநிதி எனது அண்ணன் கோவிந்தசாமி நிலத்தை வாங்கியவர். என் பக்கத்து நிலத்துக்காரர். என் ஊர்க்காரர்.

2. என் மனைவி கோவிந்தம்மாளுக்கு எழுத படிக்க தெரியாது. 2017 வருடம் ஜனவரி மாதம் 6ம் தேதி காலை 6.00 மணி அளவில் சம்பவம் நடந்தது. அப்போது உளுந்து விளைந்த எங்கள் நிலத்தில் மாட்டை பிடித்துகொண்டு கருணாநிதி போனார். அதை என் மனைவி கேட்டார். அதற்கு கருணாநிதி தெவிடியா, நாராக்கூதி என்று அசிங்கமாக என் மனைவியை திட்டியுள்ளார். என் மனைவியின் வலது கையை பிடித்து முறுக்கி, செருப்பால் வலது கண்ணத்தில் அடித்துள்ளார். அப்போது 1 .கி.மீ தூரத்தில் உள்ள நிலத்திற்கு சென்றியிருந்தேன். திரும்பி வந்தபோது மேற்படி சம்பவத்தை என் மனைவி என்னிடம் கூறினார். உடனே செஞ்சி அரசு மருத்துவமணைக்கு காலை 10.00 மணிக்கு என் மனைவியை சிகிச்சைக்கு சேர்த்தேன். அவர்கள் மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துமவணைக்கு சென்றோம். முண்டியம்பாகக்கம் மருத்துவமணையில் 15 நாள் உள்நோயாளியாக தங்கி என் மனைவி சிகிச்சை எடுத்துகொண்டார். பிறகு வீட்டிற்கு வந்தோம். போலிசார் முண்டியம்பாக்கம் மருத்துவமணையில் இருந்தபோது வந்து விசாரித்தார்கள். செஞ்சியில் மருத்துவமணையில் இருந்தபோதும் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் நான் கூறிய சம்பவங்கள் என் மனைவி சொல்லிதான் எனக்கு தெரியுமா என்றால் ஆமாம். என் பிள்ளைகளும் சொன்னார்கள். குரல் கேட்டு நானும் ஓடிவந்தேன். சண்டை போடும்போது எங்கு இருந்தேன் என்றால் மோட்டார் நிறுத்திவிட்டு வந்துகொண்டியிருந்தேன். திட்டியபோதோ, அடித்தபோதோ நான் அங்கு இல்லை என்றால் இல்லை.

நிலத்தில் என்ன பயிர் செய்திருந்தேன் என்றால் உளுந்து. போலிசார் வரைபடத்தில் சம்பவம் நடந்த இடம் புழுதியாக இருந்ததாக குறிபிட்டியிருக்கும் நிலையில் உளுந்து போட்டியிருந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் போட்ட உளுந்து பயிர் எத்தனை மாதம் என்றால் 1 மாதம் பயிர். ஜான் உயரம் பயிர் இருந்தது. என் மனைவியுடன் மருந்துவமணைக்-கு சென்றேனா என்றால் சென்றேன். எத்தனை மணிக்கு மரு்துதவமணையில் சேர்த்தோம் என்றால் செஞ்சி அரசு மருத்துமவணையில் காலை 10.00. விபத்து பதிவேட்டில் 12.30 மணிக்கு சேர்ந்ததாக பதிவு செய்யப்பட்டியிருக்கும் நிலையில் 10.00 மணிக்கு சேர்ந்ததாக கூறும் சம்பவம் வேறு என்றால் சரியல்ல. மருத்துவரிடம் 2 பேர் அடித்ததாக என் மனைவி சொல்லியுள்ளார் என்றால் 1 நபர் தான் அடித்தது. கருணாநிதிதான் அடித்தது.

மருத்துவரிடம் 2 பேர் அடித்ததாக என் மனைவி சொல்லவில்லையா என்றால் ஆமாம். போலிசார் என்னை எப்போது விசாரித்தார்களா என்றால் மருத்துவமணைக்கு சென்று வந்த பிறகு விசாரித்தார்கள் தேதி தெரியவில்லை. சம்பவ இடத்தில் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் விசாரித்தார்கள். சம்பவ இடத்தில் விசாரித்ததாக முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் இல்லை. சம்பவ இடத்தில்தான் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளள்ப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.